# குளித்தலை நகராட்சி

31.10.2019.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) திரு.ந.புகழேந்தி அவர்களின் அக்டோபர் 2019.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி அலுவலக உபயோகத்திலான Ricoh MP 2555 SP Digital Printer டோனர் ஒன்று சப்ளை செய்தல் பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட Ricoh விற்பனை முகவர் கிராபி டெக் இமேஜிங் சொல்யூசன் நிறுவன விலைப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ரூ.7965 செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ) முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.848/2018/இ1)

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பகுதியிலான தனது சொத்தின் காலி இடத்தினை அருகிலிருக்கும் சுப்ரமணி குடும்பத்தார் ஆக்கிரமிப்பு செய்வதினை ஆட்சேபணை செய்து, காமாட்சி குடும்பத்தினர், வாதிகள் 5 நபர்கள், 40/33ஏ.ஆர்.எஸ்.ரோடு, குளித்தலை முகவரியிலானோர், குளித்தலை ஆணையரை மூன்றாவது பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்து உள்ளனர். மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு.ஆர்.மூர்த்தி, பி.ஏ., பி.எல்., அவர்கள், நகராட்சி சார்பாக வழக்கினை நடத்துவதற்கான வழக்காடு கட்டணம் ரூ.7500/–ஐ, செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று, பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2362/2019/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு முன்எச்சரிக்கை நடவடிக்கையாக, முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கு கை புகைமருந்து இயந்திரம்–6 மற்றும் கேஸ் சிலிண்டர் புகை மருந்து–100 வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்த மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2310/2019/எச்1)

பொருள்– 05. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு நடவடிக்கை முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கு புகை மருந்து அடிக்கும் புகைபோக்கி இயந்திரம் பழுது அடையாமல் இருக்க 2019–2020.ஆம் ஆண்டுக்கு வருடாந்திர பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. ஆதலால் பெரிய புகைபோக்கி இயந்திரம்–1, சிறிய புகைபோக்கி இயந்திரம்–6 மட்டும் வருடாந்திர பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,41,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2309/2019/எச்1)

பொருள்– 06. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிய, பாதுகாப்பு உபகரணங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி, கையுரை–90, முகவுரை–90, குப்பை லாரிக்கு வலை–4, ரோப்புடன் விசில்–40, ஒளிரும் ஜாக்கெட்–40, கம்பூட்–20, தலைகவசம்–40 வாங்குவதற்கு விலைப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பாதுகாப்பு உபகரணங்கள் | Mahaa Enterprises 1.ன்விலை ரூ. | Chendur Enterprises 1.ன்விலை ரூ. | AK Enterprise 1.ன்விலை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | கையுரை | 320/– | 296/– | 315/– |
| 2) | முகவுரை | 230/– | 190/– | 200/– |
| 3) | குப்பைலாரிக்கு வலை | 3600/– | 3500/– | 3900/– |
| 4) | ரோப்புடன் விசில் | 150/– | 100/– | 110/– |
| 5) | ஒளிரும் ஜாக்கெட் | 430/– | 395/– | 405/– |
| 6) | கம்பூட் | 750/– | 697/– | 710/– |
| 7) | தலை கவசம் | 380/– | 359/– | 365/– |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Chendur Enterprises, Trichy-1 விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3). பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2204/2019/எச்1)

பொருள்– 07. நடைபெற உள்ள சாதாரண உள்ளாட்சி தேர்தல்–2019 தொடர்பாக, இந்நகர்மன்றத் தேர்தல் நடத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.2727/2017/அ1)

பொருள்– 08. கரூர் மாவட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களுக்கு தேவைப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கர்நாடகா மாநிலத்திலிருந்து வரப்பெறும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை, தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூமாலை வணிக வளாகத்தில் இருப்பு வைக்கும் நிகழ்வினை, ஆரம்பம் முதல் முடிவு வரை வீடியோ எடுக்கும் பணியினை குளித்தலை மற்றும் கரூர் நகராட்சி ஆணையர்கள் மேற்கொள்ளவும், வீடியோ பதிவு செய்வதற்கான செலவினங்களை, சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர், நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.பவ2/3791/2019, நாள்–27.09.2019.ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, வீடியோ பதிவு செய்து, குறுந்தகட்டினை, மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்த செலவினம் ரூ.5000/–க்கான பில் பட்டியல் திரு.ஜே.ராம்குமார், அண்ணாநகர், குளித்தலை என்பவரிடமிருந்து வரப்பெறப்பட்டுள்ளது. இத்தொகையினை மன்ற அனுமதி எதிர்நோக்கி, தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதி எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று செலவின தொகை ரூ.5000/– பொதுநிதியின்கீழ் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2727/2017/அ1)

பொருள்– 09. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AY-6449 Front and Back Loader (BEML) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.2,35,000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பழுதுப்பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2311/2019/எச்1)

*******

# குளித்தலை நகராட்சி

31.10.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 174 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 175 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 3 | 3 | 176 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 177 | அனுமதியளிக்கப்பட்டது. |
| 5 | 5 | 178 | அனுமதியளிக்கப்பட்டது. |
| 6 | 6 | 179 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 180 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 181 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 182 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.